1981 மார்ச் 4]

சில பேர்கள் அசலைத் தள்ள வேண்டுமென்று சொன்னார்கள். அவர்கள் கடைசியிலே சொல்கின்ற சயமத்தில் அது குறித்து 15 தினத்தில்.......................

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அந்தக் கூட்டத்தினுடைய டிடெய்ல்சுக்குள் போகக் கூடாது. கேள்வி வேண்டுமானால் கேட்கலாம். கூட்டத்தைப்பற்றி வேறு நேரத்தில் பேசலாம்.

திரு. வி கிருஷ்ணமூர்த்தி : வட்டியைத் தள்ள வேண்டும். அல்லது அசலைத் தள்ள வேண்டுமென்ற பல்வேறு வகையான கோரிக்கைகள் எழுப்பிய நேரத்தில், இன்னும் 15 தினங்களிலே நாங்கள் இது சம்பந்தமாக முடிவு எடுத்து அறிவிக்கின்றோம் என்று மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் பல மாதங்களுக்கு முன்னதாகக் கூறினார்கள். இதுவரையிலே அறிவிக்கவில்லை. அரசாங்கத்தினுடைய முடிவுதான் என்ன ? அது விஷயத்திலே, கூட்டுறவுக் கடன்களை, இனிமேல், ரத்து செய்வதிலே, அல்லது வட்டியைத் தள்ளுவதிலே, அசலைத் தள்ளுவதிலே அரசு என்ன முடிவுகளை மேற்கொண்டது என்பதை மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களோ அல்லது முதலமைச்சர் அவர்களோ விளக்குவார்களா ?

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முடிவு செய்யப்பட்டிருந்தால் இங்கே தெரிவிக்கப்பட்டிருக்கும். ஆகவே இன்னும் முடிவு செய்யப்படவில்லையென்பதுதான் பொருள்.

வரதட்சிணைக் கொடுமை.

*வினா எண் 364— திரு. குமரி அனந்தன் : மாண்புமிகு கூட்டுறவு—சட்ட அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுககு விடையளிப்பாரா —

(அ) வரதட்சணைக் கொடுமையால் இவ்வாண்டில் நிகழ்ந்துள்ள தற்கொலைகள் எவ்வளவு ;

(ஆ) எத்தனை வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :

(அ) ஒன்றுமில்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. குமரி அனந்தன் : மாண்புமிகு அவை நாயகர் அவர்களே, வரதட்சணைக் கொடுமையால் இவ்வாண்டில் நிகழ்ந்துள்ள தற்கொலைகள் எவ்வளவு என்கின்ற கேள்விக்கு, நமது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இல்லை என்று சொல்லி இருக்கிறார்கள். நாள்தோறும் நாளேட்டில் வந்து கொண்டிருக்கிற செய்திகள் மட்டுமல்லாமல், ஆங்காங்கு வந்து கொண்டிருக்கின்ற தகவல்கள் வரதட்சணைக் கொடுமையால் ஏராளமான தற்கொலைகள் நிகழ்ந்து கொண்டிருக்கின்றன என்பதைத்

TRUTH ALONE TRIUMPHS

தெரிவிப்பதோடு மட்டுமல்லாமல், கொலை கூட செய்யப்பட்டு பிறகு அது தற்கொலையாக மாறுகிறது என்றும் தெரிவிக்கின்றன. அரசாங்க இலாகாவிலே அதைப் பற்றி மேலும் தீவிர புனரா லோசனை செய்து ஒற்றர்கள் மூலமாக அந்தச் செய்திகளை அறிந்து ஆராயவில்லை என்ற காரணத்தால் சொல்லுகிறேன், அந்தச் செய்திகளை அறிந்து இந்த மிகப் பெரிய வேதனைக்குரிய செயலைத் தடுத்து நிறுத்துவதற்கு அரசு முன் வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வரதட்சணைக் கொடுமையைப் பொறுத்த வரைக்கும் அதன் காரணமாக தற்கொலை செய்து கொண்ட வர்களைப் பற்றிய தகவல் அரசுக்கு வரவில்லை. காவல் துறை யினரிடம் கேட்டு இருக்கிறோம். தற்கொலை செய்து கொண்ட தகவல் தமிழ்நாட்டில் எந்தப் பகுதியில் இருந்தும் வராத கார ணத்தால், இத்தகைய தகவல்களைத் தந்திருக்கிறேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதைப்போல எங்கேனும் இத்தகைய நிகழ்ச்சிகள் நடந்திருக்குமானால் ரகசிய போலீஸ் மூலம் ஆராய்ந்து அந்தத் தகவலை அவைக்குத் தருகிறேன்.

திரு. குமரி அனந்தன் : தலைவர் அவர்களே, இனிமேல் ஆராய்கிறேன் என்று சொன்னதற்கு நன்றி சொல்லி, இந்தப் பெண்கள் 30 வயது, 35 வயதுக்கு மேலும் வரதட்சணைக் கொடுமைக் காரணத்தால், காலமகள் கற்புச் சிலம்பை கையிலே கொடுத்து, இளமைச் சிலம்பை திருடிப் போய்விடுகிற காரணத் தினால், (குறுக்கீடு) காலமகள் கற்புச் சிலம்பைக் கையிலே கொடுத்து, இளமைச் சிலம்பைத் திருடிப் போய்விடுகிற காரணத் தால், அம்மி மிதித்து, 'அருந்ததி காட்டி, தாலிக் கயிற்றில் தளைப்படுத்திக் கொள்ள வணிக மகன் வரவில்லையே என்று ஏங்கிக் கிடக்கின்ற அந்தப் பெண்களின் ஏக்கம் போக்கிட சுயம் வரத் திட்டத்தை இந்த அரசு மேற்கொள்ளுமா, அதற்கான ஊக்கத்தை அளிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, மக்கள் அரசனாக மாறினால், சுயம்வரத் திட்டம் ஏற்றுக் கொள்ளப்படும்.

திரு. ரா. உமாநாத் : தலைவர் அவர்களே, வரதட்சணைக் கொடுமையால் தற்கொலை செய்து கொள்கின்ற ரிப்போர்ட் ஒன்றும் வரவில்லை என்று கேட்கிறபோது உண்மையிலேயே ஷாக்காக இருந்தது. போன மாதம் 8-ஆம் தேதி திருச்சி நகரத் திலே புத்தூர் அக்ரகாரத்திலே ஒரு வீட்டில் விமலா என்கின்ற பெண்ணை பக்கத்து கோடவுனிலே மாமியாரும், கணவனும் சேர்ந்து மண்ணெண்ணெய் ஊற்றி அவளை எரித்து விட்டார்கள். (குறுக்கீடு) இதிலே இரண்டு வெர்ஷனும் வருகின்றன. அவர்கள் எரித்ததாகவும், மாமியார் கொடுமை தாங்காமல் வரதட்சணை சம்பந்தமாக தற்கொலை செய்து கொண்டதாகவும் வந்திருக் கின்றது. அது நகரம் பூராவும் பரப்பரப்பாக போய், பீதி உண்டாக்கி இருக்கின்றது.

1981 மார்ச் 4]

அதே நேரத்தில் அந்த மாமியாரும் அந்தக் கணவனும், They are freely going about. அந்த நிலைமை இருக்கிறது. என்னுடைய கேள்வி என்னவென்றால், அப்படிப்பட்ட சம்பவங்கள் போலீஸ் கவனத்திற்கு வந்தவுடனே, at the first instance itself அந்த மாமியாரையும், கணவனையும் கைது செய்து பிறகு இன்வெஸ்டிகேஷன் நடத்துகின்ற முறையை ஏன் கையாளக் கூடாது என்று கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, சட்டத்தில் குறை இருந்தால் திருத்தம் கொண்டு வரச் சொன்னதற்கு நன்றி. ஆனால் குற்றவாளிகள் தப்பிவிடு வதற்கு இந்த அரசு உடந்தையாக இருக்காது,

திரு. இரா. தாமரைக்கனி : தலைவர் அவர்களே, வரதட்சிணைக் கொடுமையைப் போக்குவதற்கு ஒரு யோசனையை அமைச்சருக்குச் சொல்லிக் கொள்கிறேன். நாட்டிலே பெண்கள் அதிகமாக இருக்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா நேரத்தில் யோசனை சொல்லக் கூடாது. மாண்புமிகு உறுப்பினர் விரும்பினால், தனியாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்தில் சென்று சொல்லிக் கொள்ளலாம்.

(முற்பகல் 10—00)

பேரவையின் அனுமதியோடு, வினா நேரம் நீட்டிக்கப்படுகிறது.

திரு. கெ. சொக்கலிங்கம் : பேரவைத் தலைவர் அவர்களே, இந்த வரதட்சிணைப் பிரச்சினையால் பல பெண்கள் பாதிக்கப்பட்டு இருக்கிறார்கள். அந்த அடிப்படையில் இந்த வரதட்சிணைப் பிரச்சினையால் பாதிக்கப்பட்டுள்ள பெண்கள், கலப்புத் திருமணம் செய்து கொள்ள முன்வருபவர்களுக்கு இந்த அரசாங்கம் வேலை வாய்ப்பில் முன்னுரிமை வழங்க முன் வருமா ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : பேரவைத் தலைவர் அவர்களே, கலப்புத் திருமணத்தைப் பொறுத்தவரையில், ஜாதியை விட்டு திருமணம் செய்து கொள்கிறவர்களுக்கு முன்னுரிமை தரும் நடவடிக்கை தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மற்றவர்களுக்கு அது இல்லை.

சென்னை உயர்நீதி மன்றத்தின் பெயரை மாற்றியமைத்தல்

*வினா எண் 365—திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் : மாண்புமிகு கூட்டுறவு—சட்ட அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா —

'' சென்னை உயர்நீதி மன்றம்'' (Madras High Court) என்ற பெயரை '' தமிழ்நாடு உயர்நீதி மன்றம் '' (Tamil Nadu High Court) என்று மாற்ற அரசு ஏதேனும் முயற்சிகள் மேற்கொண்டுள்ளதா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : சென்னை உயர்நீதி மன்றம் என்றபெயரை தமிழ்நாடு உயர்நீதி மன்றம் என்று மாற்ற நடவடிக்கைகள் ஏதும் அரசால் இதுவரை மேற்கொள்ளப்படவில்லை.